## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## EP No.10/2025

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரஜினி | மதம் | : இந்து |
| த/பெ | : கண்ணன் | ஜாதி | : -- |
| வயது | : 40 | கிராமம் | : பெரியகடம்பூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**11.11.2025**
**ம.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மனுப்படி உத்தராவாக வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.